**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.833/2024** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **Semmanchry PS** |
| **Deposition of witness for** | : | **PW3/LW5** |
| | : | |
| **Name** | : | லட்சுமி |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2026.**

**(**எதிரிகள் ஆஜர் **,** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் செம்மஞ்சேரி சுனாமி நகரில் வசித்து வருகிறேன். நான் டிபன் கடை வைத்துள்ளேன். எதிரி ராஜரத்தினம் என்பவரை தெரியும். இரண்டாவது எதிரி சரவணன் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புகார்தாரர் பிரியா என்பவரை தெரியும். இவர்கள் அனைவரும் எனது பகுதியை சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். ஆனால் எனக்கு நேரடியாக தெரியாது. எதிரி ராஜரத்தினம் அங்கு சின்ன சின்ன பசங்க விளையாடிக் கொண்டிருந்த பொழுது கல்லால் அடித்ததாக பிரச்சனை ஏற்பட்டது. இது அங்கு உள்ளவர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும். நான்

நேரடியாக பார்க்கவில்லை. அவர் அனைவரையும் தரை குறைவாக தான் பேசுவார். என்னையும் உன்னை உள்ள தள்ளி விடுவேன் என்று தான் பேசி உள்ளார். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு மூன்று மகள்கள் உள்ளனர். மகன் இல்லை என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் எனது மகனுடன் வெளியே நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். .எனக்கும் ராஜரத்தினத்திற்கும் முன் விரோதம் இருந்தது என்றால் சரிதான். 2009 ஆம் ஆண்டு எனது பெயரிலும் பிரியா பெயரிலும் ராஜரத்தினம் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். நான் இந்த சண்டையை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரியா சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. தெருவில் உள்ளார்கள் சொல்லி தெரியும். பிரியாவும் நானும் நண்பர்கள் என்றால் சரியல்ல. அங்கு உள்ளவர்கள் அனைவரும் எனக்கு தெரிந்தவர்கள். பிரியா எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான்.

2. பிரியாவும் நானும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று நான் காலையில் வேலைக்கு சென்று விட்டேன் என்றால் சரிதான். நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் எனது வீட்டு அருகே வந்து விசாரணை செய்தனர். போலீஸாரிடம் நான் சம்பவத்தை பார்க்கவில்லை நான் வேலைக்கு சென்று விட்டதாக தான் கூறினேன். பெரியவை எனக்கு பெசன்ட் நகரில் உள்ள போதே தெரியும். என்றால் சரிதான் பிரியாவும் அவரது அம்மாவும் அழுதே அவர்கள் காரியத்தை சாதிப்பார்கள் என்றால் சரிதான் பிரியாவின் தாயார் கை கால் சரியில்லாததால் பேஷன் நகரில்ல் உள்ள போது அழுது கொண்டே பிச்சை எடுப்பார்கள் என்றால் அதை பற்றி எனக்கு

தெரியாது. பிரியா வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 50 மீட்டர் அங்கிருந்து பார்த்தால் தெரியாது என்றால் சரிதான்.

3. பிரியா அந்த பகுதியில் உள்ளார்கள் நிறைய நபர்களுடன் சண்டை போடுவார்கள் என்றால் சரிதான். போலீஸ் கேஸ் அவர்கள் மீது அதிகமாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரியா சண்டை போடும்போது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொள்வதாக நாடகம் ஆடுவார்கள் என்றால் ஒரு முறை செய்தார். பெசன்ட் நகரில் உள்ள பொழுதும் செய்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. இந்த வாழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் பிரியா எனது நண்பர் என்பதாலும் ராஜரத்தினம் மீது முன் விரோதம் உள்ளதாலும் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**.** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.

**<u>Chapter XXIII code of Criminal procedure</u>**
**<u>DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR</u>**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | **:** | |
| **Miscellaneous** | **:** | **CC.No.833/2024** |
| **Preliminary Register** | **:** | |
| **Police Station** | **:** | **Semmanchry PS** |
| **Deposition of witness for** | **:** | **PW4/LW6** |
| | **:** | |
| **Name** | **:** | மணிகண்டன் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2026.**

**(**எதிரிகள் ஆஜர் **,** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் செம்மஞ்சேரி சுனாமி நகரில் வசித்து வருகிறேன். நான் மூட்டை தூக்கும் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புகார்தாரர் பிரியா என்பவரையும் எனக்கு தெரியாது, இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த கையெழுத்தும் போடவில்லை. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை. பார்வை மகஜரில் சாட்சியின் கையொப்பம் இல்லை.

(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 30.7.2016 ஆம் தேதி இரவு 20.30 மணி அளவில் செம்மஞ்சேரி சுனாமி நகர், ஐந்தாவது குறுக்கு தெரு அருகே நின்று கொண்டிருந்த பொழுது காவல்துறையினர் ஒரு சண்டை வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் என் முன்னிலையில் வரைந்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரிகள் எனது பகுதியை சார்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**.** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.